# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
## Fourth Year First Semester Examination in B.A (Economics Special)
## 2013/2014 (July, 2015)

### ECOS 4102: Research Methodology in Economics

**Answer all questions** **Time: 03 Hours**

1.

a. சமூக விஞ்ஞான ஆய்வு என்றால் என்ன? சமூக விஞ்ஞான ஆய்வு முறைகளை வரையறை செய்க. (06 புள்ளிகள்)

b. பண்பு ரீதியான (Qualitative) ஆய்வு முறையிலிருந்து அளவு ரீதியான (Quantitative) ஆய்வு முறையை வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

c. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

i. விளக்க முறை ஆய்வு (Descriptive Research)
ii. பகுப்பாய்வு முறை ஆய்வு (Analytical Research)
iii. எதிர்வு கூறல் ஆய்வு (Predictive Research) (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2.

a. ஒரு ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளன் கவனிக்க வேண்டிய முக்கியமான படிமுறைகளை சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

b. ஒரு ஆய்வாளன் ஆய்வுத்தலைப்பினை தெரிவுசெய்கின்ற போது கருத்திலெடுக்க வேண்டிய வினாக்கள் எவை? இவை எவ்வகையில் முக்கியம் பெறுகின்றன என கூறுக? (07 புள்ளிகள்)

c. ஆய்வாளன் ஆய்வுக்குப்பயன்படுத்தும் கருவிகளை (Tools for Research) ஆய்வு முறையில் (Research Method) இருந்து வேறுபடுத்துக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3.

a. ஒரு ஆய்வாளன் எவ்வாறு பரந்த தலைப்பில் இருந்து ஆய்வுக்கான தலைப்பினை முடிவு செய்யமுடியும் என உதாரணம் தந்து விளக்குக. (07 புள்ளிகள்)

b. ஆய்வுப்பிரச்சினை கூற்று (Research Problem Statement) என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

c. ஆய்வு வினா (Research Question) என்றால் என்ன? ஆய்வு வினாவானது எவ்வாறு ஆய்வு நோக்கத்துடன் தொடர்புபட்டுள்ளது என விளக்குக. (07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4.

a. பண்பு ரீதியான தரவுகளை வகைப்படுத்தி உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிக

b. முதல் நிலைத்தரவு திரட்டல் முறைகளை குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிக

c. முதல் நிலைத்தரவு திரட்டல் முறைகளில் ஆய்வாளன் எதிர்நோக்கும் சவால்களை விளக்குக.

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்

5.

a. 'லிக்கேட்' அளவுதிட்ட ஆய்வு முறை (Likert Scale Method) என்றால் என்ன? ஆய்வுகளில் இம்முறையினது பொருத்தப்பாட்டினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்

b. ஒரு குடித்தொகையின் மாதிரி என்றால் என்ன? ஆய்விற்கு பயன்படுத்தப்படும் மாதிரிகளின் வகைகளை கூறி விளக்குக.

(07 புள்ளிகள்

c. ஒரு ஆய்வின் தரவுப்பகுப்பாய்வின் போது பிற்செலவு முறையினை பிரயோகிக்கின்றபோது கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் யாவை?

(07 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளி